ஆதிக்கவெறி கொண்டலையும் அமெரிக்கா!

அதன் வலையில் இந்தியா வீழ்வதா?

அகில உலகக் கண்கொண்ட அறிஞர் இதனை அறியாரோ?

அமைதிகாக்கும் பேச்சும்—ஆபத்தான போக்கும் பொருந்துமா?

பெவின் தோற்றூர்—பண்டிதர் வெற்றிகாண்பது சாத்தியமா?

“போரால் ஒரு பிரச்சினையும் தீருவதில்லை. காஷ்மீரில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே போரைத் தடுக்க நான் எனது சக்தி முழுவதையும் பிரயோகித்து முயற்சிப்பேன்.” —பண்டித ஜவஹர்.

“கிழக்கோடியில், கம்யூனிசத்திற்கு எதிராக முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்ய இந்தியாதான சிறந்த தளமாகும்.”

“ஆதலால், முடிந்த வரையில் இந்தியாவிற்குப் பொருளாதார உதவி செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.”

“இவைகளை கவனத்தில் வைத்துக்கொண்டு, ஐக்யநாடு பாதுகாப்புச் சபையில் இடம்பெற இந்தியா கொண்டிருக்கும் அபிலாஷையை, அமெரிக்கா ஆதிரிப்பதென்று முடிவிற்கு வந்திருக்கிறது”

(சில நாளைக்கு முன் இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் நடைபெற்ற டாலர் பேச்சு வார்த்தை முடிந்த பின்னர், கம்யூனிசத்தைக் குறித்தும் அமெரிக்கக் குடியரசின் செயலாளர் டீன் ஆக்கீசனும், பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரி பெவினும் கலந்து பேசி முடிவிற்கு வந்துள்ளதின் சுருக்கம்.)

‘போர் கூடாது’ ‘போர் கூடாது’ என்றப் பேச்சு வலுவடைந்த வண்ணம் இருக்கிறது. தனி மனிதன் என்ற முறையில், மனிதப் பண்புடன் இருப்பவர் எவரும், போரை விரும்பார். போரால் ஏற்படும் நல்ல பலன்களைக் காட்டிலும் தீமைகள் தான் கூடுதலாக இருக்கும்.

போரின் பின்விளைவு, வறுமை, பஞ்சம், ‘என் பதில் வந்துமுடியும். நடைபெற்ற ஒவ்வொரு போரும் உணர்த்தும் படிப்பினை இது தான். போரின் பயங்கர விளைவு பற்றிப் படித்திருந்தாலும், பிறர் சொல்லக் கேட்டிருந்தாலும், பார்த்திருந்தாலும், கேட்போர்கள் சிந்தருகும் வண்ணம் போரின் கேடுபற்றிப் பேசும் ஆற்றல் மிக்கவர்கள், சந்தர்ப்பம் நேர்ந்த காலை, போரிலே முன் பின் சிந்திக்காமல் குதித்துவிடுவர். ‘போரின் கேடு பற்றி மனம் பதறிப் பேசிவந்தீரே இதுநாள்வரை அதனை மறந்து, போர்க்கோலம் கொள்ளுகிறீரே, ஏன் இந்தப் பொருந்தாச் செயல் புரிகிறீர்,’ எனக் கேட்டால், ‘போர் எனக்கும் பிடிக்கவில்லைதான், போரின் தீமைகளைக் கூறிவந்ததும் உண்மைதான், போர் வருவதும் வராமல் இருப்பதும் என் செயலை மட்டுமா பொருத்திருக்கிறது, சுயேச்சையாக நடக்க உரிமை இருந்தாலும் சூழ்நிலை என்னைப் போரில் பலவந்தமாக என் பிடரியைப் பிடித்துத் தள்ளிவிட்டதே! நான் என் செய்வது?’ என்று கூறுவர் பின்னர். சாதாரணமான ஒருவர், இவ்வாறு கூறுவது பொருத்தமானதுதான். அவரால் அவ்வளவுதான் முடியும். அவரிடத்திலிருந்து உலகம் அதிகமாக ஒன்றும் எதிர்பார்க்கமுடியாது. சுற்றுச்சார்புகளுக்கு பலியாகாமல், சுற்றுச்சார்புகளை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டு, தன் கோட்பாட்டிற்குச் சாதகமானச் சூழ்நிலையை, ஏற்படுத்திக் கொள்ளுகிறவர்கள்தான் ஒரு நாட்டின் பொறுப்பான பதவியில், நாட்டு மக்களுக்கு வழிகாட்டும் நிலையில், நம்பிக்கைக்குரிய தலைவராய் இருக்க முடியும். அத்தகு தகுதியுடையவர்கள், பலகாலமாகத் தம் உள்ளத்தில் ஊறிஊறி உரம்பெற்றுவிட்ட உயர்ந்த கொள்கை, சுற்றுச்சார்புகள் மீது பழியைப் போட்டு, பலியிட முன்வரமாட்டார்கள் பெற்றுள்ள பதவியே போவதாக இருந்தாலும், பாமர மக்களின் தூற்றுதலும்தாக்குதலும் தன்னையே நோக்கி வந்தாலும்கொண்ட குறிக்கோளை இறுதிவரை, ஏற்பட்ட இடைஞ்சல்களை எல்லாம் எதிர்த்துப்போராடி, நிறைவேற்றிய இணையற்ற வீரன்—மகாலட்சிய புருஷன் என்ற அழியாப்புகழ், கிடைத்துவிடும் அந்த மாவீரனுக்கு. சிறக,

இன்று உலகம் இரண்டு முகாம்களாகப் பிரிந்து, தினம் தினம் பகைமூட்டும் கொடுவினைகளைப் புரிந்து கொண்டு வருகின்றன. டாலர்—ரூபிள் ஒன்றைஒன்று விழுங்கும் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளன, அடிப்படை இலட்சியத்தில், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேற்று

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்தேடு)

மலர் 1 | சென்னை (30—9—49) இ வேலூர் (1—10—49) | இதழ் 52

பாதைகள் செப்பனிடப் பணமில்லை!

திறமையான :: :: ஆட்களுமில்லை

சென்னை மாகாணத்தில் பல பாதைகள் பெரியவையும், சிறியவையும் நீண்டகாலமாகச் செப்பனிடப்படாமல் பாழ்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை யெல்லாம் ஒழுங்காகச் செப்பனிட வேண்டுமென்று பொது மக்கள் எத்தனையோமுறை அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியும், முறையிட்டும் இதுவரை எவரும் அதற்கான முயற்சி செய்திருப்பதாகக்காணோம். ஆனால் முறையீடுகள் அதிகப்பட்டபோது, அரசாங்கம், பாதைகளைச் செப்பனிடுவதற்கென்று ஐந்தாண்டுத் திட்டம், என்று வகுத்திருப்பதாகத் தெரிவித்தது. பாதைகளைச் செப்பனிடுவது, புதிய பாதைகள் அமைப்பது, இருக்கும் பாதைகளை விரிவாக்குவது போன்ற பல இனங்கள் இத்திட்டத்தில் அடங்கியிருக்கின்றன வென்றும், இத்திட்டம் நிறைவேறினால், பல கிராமங்களுக்கும் பாதைகள் ஏற்பட்டு, இணைப்பு ஏற்பட்டு விடுமென்றும், இந்தத்திட்டப்படி புதிதாக 10,620 மைல் பாதைகள் போடப்படுமென்றும், இதற்காக 12 கோடி ரூபாய் செலவிடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. மக்கள் மகிழ்ந்தனர்-நல்ல திட்டம், இதனால் போக்குவரத்துக்கு வசதிகள் கிடைத்துவிடுமென்று.

ஆனால் திட்டம் ஏட்டளவோடு நின்றுவிட்டது. நடைமுறையில் வரவில்லை, திட்டத்தை நிறைவேற்றிவைக்க அரசாங்கம் முயன்றதாகத் தெரியவில்லை என்று மீண்டும் மக்கள் மன்றம் குமுறுகிறது.

இதற்குச் சமாதானம்கூறுகிற முறையில், அமைச்சர் பக்தவத்சலனார் போக்கு வரத்து இலாகாக் கூட்டத்தில் பேசியபோது, தக்க திறமையுடைய ஆட்கள் கிடைக்காமற் போய் விட்டதுதான் இந்த வேலையை நிறைவேற்றி வைக்க முடியாமற் போய் விட்டதற்குக் காரணம் என்று அறிவித்தார்.

நம் நாட்டில் எப்போதும் அரசாங்கத்தார் கூறக் கூடிய பதில் ஒன்றுதானிருக்கும் அதாவது பணமில்லை என்பது தான்; எதற்கெடுத்தாலும், அது எவ்வளவு நல்ல வேலையாக-திட்டமாக இருந்தாலும் அரசாங்கம் பணமில்லை என்று கூறுவது வழக்கமாகிவிட்டது இப்போது அமைச்சர் பக்தவத்சலனார், திறமைப் பெற்ற ஆட்களில்லை என்ற மற்றொரு குறையைத் தெரிவித்துள்ளார். இப்போது கைத்தொழிற் கல்லூரிகள் இத்தகைய திறமைகளை உற்பத்தி செய்து கொண்டிருப்பதாகவும் இந்த ஆண்டே இக்குறை ஓரளவு தீருமென்றும் மந்திரியார் கூறுகிறார். நாட்டிலே எதற்கெடுத்தாலும் ஏதாவதொரு “இல்லை” போடும் புத்தி குறைந்து, இருக்கும் சாதனங்களைக்கொண்டு திறம்பட, வேலைகளை முடிக்கும், ஆற்றல் பெருக வேண்டும். பெருகுமா?

அசட்டுத்தனம்

“கம்யூனிட்டு பூனை தற்போதைய பிரகடனை ஒன்றே ஒழித்துவிடுமென்று அதிகாரிகள் நம்புவார்களாயின அது போன்ற அசட்டுத் தனம் எதுவுமில்லை”

—சு. மி

நாட்டில் நடக்கும் தவறுகள்

குழப்பமுண்டுபண்ண வழி செய்வதா?

நாட்டாட்சி நம்மவர் கையில் வந்தவுடனே, பலவித விந்தை நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெற்று வருகின்றன.

நாட்டிலே பல்வேறு மதங்களிருப்பதால், இங்கு மதச்சார்பற்ற ஆட்சியே நடைபெறும் என்று அழுத்தம் திருத்தமாக இந்தியாவின் முதலமைச்சர் முதல், மாகாண அமைச்சர்களவரை கிராமபோன் ரிக்கார்டு போல ஒரே மாதிரியாகக் கூறி வைத்தார்கள்.

ஆனால், இங்கே, அமைச்சர்கள் மேயர் மற்றுமுள்ள பரிவாரக் கூட்டத்தார் அனைவரும் போகுமிடங்களிலெல்லாம் வெளிப்படையாக இந்து மதப் பிரசாரம் செய்யத் தவறுவதில்லை; இந்து மதத்தில் தாங்கள் இதுவரை கண்டுபிடித்து அனுபவித்திருக்கும் அதியற்புத தத்துவங்களை வற்புறுத்திக் கூறப் பின் வாங்குவதில்லை.

நாட்டிலே, இந்தி மொழியைப் புகுத்துவதற்கே பலமான எதிர்ப்பு இந் நாட்டுக் குடி மக்களால் எழுப்பப்பட்ட தென்றால், ஹைகோர்ட் ஜட்ஜுகள், ஜில்லா ஜட்ஜ் முதலியோர் தத்தம வேலைகளைக் கவனிப்பதை விட்டுச் சமஸ்கிருதத்தின் பெருமைகளைக் கூறித் திரிவதில் இறங்கி, சமஸ்கிருத மேமற்றமொழிகளுக்கும் மூலமொழி என்று தங்களுக்குத் தெரிந்தவை—தெரியாதவை எல்லாவற்றையும் சேர்த்துப் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

போதாக் குறைக்குக் கல்வி மந்திரியாக வந்த மாதவ மேனன் போகுமிடமெல்லாம் சமஸ்கிருதப் பெருமையைப் பேசுவதைத் தவிர அவருக்கு வேறு விஷயமும் அகப்படுவதில்லை. நாட்டில் 100-க்கு 80 மக்கள் படிக்க வழியில்லையே என்பதுபற்றிக் கவலைப்பட்டு, அதற்காக வெட்கி, அவ்வழியிலே போதக வேலை செய்ய வேண்டுமே என்ற கவலை அவருக்குத் தோன்றவில்லை. கீதையைத் தமிழில் பாரதியார் பாடினாதலின் சமஸ்கிருதம் உயர்ந்த மொழி என்றும், தமிழுக்கு அதனால் ஆபத்தில்லை யென்றும் கூறித் திரியும வேலையே கல்வி மந்திரியின் கடமை என்று அவர் எண்ணிக் கொண்டார் போலும்!

சமஸ்கிருதத்தால் தமிழ் கெடும் என்று கூறுபவர்கள், என்ன காரணம் கூறுகின்றார்கள் என்பதை அவர் அறிந்திருக்கின்றாரா? அதை அறியத்தான் அவருக்கு-இந்தசமஸ்கிருதப் பிரசார வேகத்தில்-அவகாசமிருக்குமா?

ஒரு தனி மதம் பற்றிப் பேசுவதும், நாட்டில் மக்களால் வெறுக்கப் படுவதும் 99 சதவிகித மக்கள் அறியாததுமான ஒரு செத்துப் போன மொழியைப் பற்றிப் பேசித் திரிவதுமான வேலையைப் பொது மக்கள் பணத்திலிருந்து பெருவாரியான சம்பளம் வாங்கும் இந்த மந்திரிகள் மேலும் விடாமல் செய்து கொண்டுபோனால், பொதுமக்களுக்குத் துரோகம் இழைத்தவர்களாவார்கள் என்பதில் ஐயமில்லை

நாட்டில செய்ய வேண்டியிருக்கும் பல முக்கியமான வேலைகளை விட்டுவிட்டு இந்த வீண் வேலைகளில் பொறுப்பான பதவிகளில் வீற்றிருப்பவர்கள் இறங்குவது ஒருபோதும் மன்னிக்கப்படத்தக்க விஷயமாகும்.

மாலை மணி

சென்னை 30—9—49 வெள்ளிக்கிழமை

பாராட்டுகிறோம்!

'வன்னியர் வகுப்பினரைப், பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து நீக்கிவிட, அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்றும், அந்த முடிவுக்கே அது வந்துவிடக்கூடும் என்றும், செய்தி அரசியல் வட்டாரங்களிலே சில நாட்களாக உலாவிவந்திருக்கக் கண்டோம். உண்மை அதுவானால், அரசாங்கம் பழிவாங்கும் படலத்தில் மூழ்கியிருக்கிறது என்று கூறி, அத்தகைய நடவடிக்கைக்கு இடங்கொடுக்கலாகாது என்று எச்சரிக்கை விடுத்திருந்தோம்.

பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து, "வன்னிய குலத்தினரை" நீக்கிவிடலாமா என்ற எண்ணம், அரசியலாருக்குத் தோன்றியதற்குக் காரணமே, அண்மையில் நடைபெற்ற காட்டாண்மைக் கழகத் தேர்தலில் பல இடங்களில், "வன்னிய மரபினர்" காங்கிரஸ்காரர்களைத் தோற்கடித்து விட்டதுதான் என்றும், அதனால் ஆத்திரமடைந்த காங்கிரஸ் ஆட்சியினர் பழிக்குப் பழிவாங்கும் திட்டத்தில் இறங்கிவிட்டனர் என்றும் நாம் குறிப்பிட்டிருந்தோம்.

கல்வி, அரசாங்க அலுவல்களில் இடம்பெறுதல் போன்ற சலுகைகள் பலபாகப் பெறுமல், பிற்பட்ட நிலையிலேயே, ஓரினமாக "வன்னியர் வகுப்பு" நின்றுவிட்டதால், மற்ற முற்போக்கு வாய்ந்த வகுப்பினரைப் போல, "வன்னியர்"களும் உயர்வாழ்வு அடைய வேண்டுமானால், அவர்களுக்குச் சலுகைகள் தொடர்ந்து கொடுக்கப்படத்தான் வேண்டும் என்றும் வற்புறுத்தியிருந்தோம். மக்களினம் ஓரினமாக வாழ வேண்டுமானால், பிற்பட்ட வகுப்பினருக்குச் சம சந்தர்ப்பங்கள் அளிக்கப்படத்தான் வேண்டும் என்றும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

பழிக்குப் பழி வாங்கும் முறையில், "வன்னியர் வகுப்புக்கு"ச் சென்னை அரசாங்கம் இழைக்க இருந்த தீங்கை உணர்ந்து, அப்போக்கை எதிர்த்துக் கண்டனத் தீர்மானங்கள் பல அனுப்பின "வன்னியர் சங்கங்கள்."

தனிப்பட்ட முறையிலும் பலர் ஆலோசனையைக் கைவிடும்படியாக வற்புறுத்தி அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கின்றனர்.

அரசாங்கத்தின் ஆலோசனையையும், அந்த ஆலோசனையை எதிர்த்து நிற்க வேண்டுமென்று வந்த கண்டனங்களும் பத்திரிகைகளிலே வெளிவந்ததைப் பலரும் கண்டிருக்கலாம்.

இவ்வளவும் ஆன பிறகு அரசாங்கம் ஆலோசனையைக் கைவிட்டுவிட்டதாக இப்பொழுது அறிவிக்கப்படுகிறது. அந்த முடிவுக்கு அரசாங்கம் வந்தது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். முதலில் ஆத்திர எண்ணத்தினால் ஏற்பட்ட முடிவுக்கு நீதி எங்கு பலியாக்கப்பட்டு விடப்போகிறதோ என்று அஞ்சிய நமக்கு, அரசாங்கத்தின் இப்போதைய முடிவு மகிழ்ச்சியூட்டுவதாகவே அமைந்துள்ளது. நீதி வழங்கப்படவேண்டிய சமூகங்களுக்கு நீதி வழங்கப்படத்தான் வேண்டும்.

"வன்னியர் மரபினரும்" அரசாங்கத்தின் முன்னைய முடிவின் விளைவால் ஏற்படும் கேட்டை உணர்ந்து, காலத்திலே தங்கள் கருத்தைத் தெரிவித்து, நீதியை நிலைநாட்டுவதிலே வெற்றி பெற்றதற்காக அவர்களையும் பாராட்டுகிறோம்.

மக்களின் குறைகளைக் கேட்டு, அவற்றிற்கு மாற்றங் காண முயலுவது அரசாங்கத்தின் நேரிய கடமைகளில் ஒன்றாகும். இந்த நேரிய கடமையைக் காங்கிரஸ் அரசாங்கம் பல சந்தர்ப்பங்களிலே நிறைவேற்ற மறந்திருக்கிறது; சில சமயங்களிலே மறுத்துமிருக்கிறது. ஆனால் இந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது, மக்களின் விருப்பத்திற்கு ஒட்டிய வகையில், தனது மனப்போக்கை அரசாங்கம் மாற்றிக்கொண்டதற்காக, அதனைப் பாராட்டுகிறோம்; பிற்பட்ட வகுப்பினருக்குரிய நீதி நிலைநாட்டப்பட்டதற்காக மகிழ்கிறோம்!

அற்ப சந்தோஷமும்-தேவையும்

'விற்பனைவரியின் வருமானம் புதிய சிகரத்தை அடைந்துவிட்டது என்று நமது மந்திரிகள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், எல்லாத் துறைகளிலும் பொருட்களின் விலைகுறைப்பைத்தான், எல்லாவற்றைக்காட்டிலும், அதிகமாக மக்கள் வரவேற்பார்கள். இதனால்தான், காலஞ்செல்லச் செல்ல பொருளாதார நிலை பலம்பெறும்.'

—ஹிந்து

சென்னை அமைச்சர்களுக்கும் கவர்னருக்கும் அர்ப்பணம்

இந்தியா கவர்னர் ஜெனரல் சி. இராஜகோபாலாச்சாரியார் தம் மாளிகையில் சிக்கன முறைகளைக் கையாள்வதாலும், எஸ்டேட்டுகளில் உணவுத் தானியங்கள் பயிர் செய்வதாலும் தக்க பலன் கிடைத்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது. சிக்கன முறையால் ஆண்டுக்கு 6 லட்சம் ரூபாய் மிச்சப்படுகிறதாம். பயிர் செய்வதால் ஆண்டுக்கு 35 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறதாம்.

சென்னை கவர்னர் பயிர் செய்யத் தொடங்கி விட்டார். ஆனால் மாளிகைச் செலவு சிக்கனம், சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுதல் முதலியவற்றையும் மேற்கொண்டால் நலமல்லவா?

அதே போல, அமைச்சர்களும், சர்க்காரியமாகச் செலவுகளையும் சம்பளங்களையும் குறைத்துக்கொண்டு, தங்கள் மாளிகைகளில் பயிர்த் தொழிலைச் செய்தால் நலமாயிருக்குமல்லவா?

கவர்னர்-ஜெனரல் வழிகாட்டுவதை மாகாணத் தலைவர்கள் பின்பற்றுவார்களா?

கிளைக் கழகம் :: அமைக்கும் முறை

திராவிட முன்னேற்றக் கழகத்திலே பற்றுதல் கொண்டுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும், நான்கணா உறுப்பினர் கட்டணம் செலுத்தி, உறுப்பினர் உரிமைச் சீட்டு (சந்தா ரசீது) பெற்று, தங்களைக் கழக உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளவேண்டும். 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உறுப்பினராகலாம்.

திராவிட முன்னேற்றக் கழகமல்லாத பிற கழகங்கள், திராவிட முன்னேற்றக் கழகமாகத் தங்களை மாற்றிக்கொள்ள விரும்பினால், தீர்மான நிறைவேற்றத்தின் மூலம், கழகப் பெயர்—போக்கு—நடவடிக்கைகளை எல்லாவற்றையும் "திராவிட முன்னேற்றக் கழகம்" என்ற பெயரில் மாற்றிக் கொள்ளலாம். மாற்றிக்கொண்டவுடனே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களாக ஒவ்வொருவரும் தங்களைப் பதிவு செய்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஏற்ற முறையில், செயற்குழுவை அமைத்துக்கொள்ள வேண்டும்.

கழகம் புதிதாகத் துவக்கப்பட வேண்டிய அவசியமுள்ள இடங்களில், பதிவு செய்துகொண்ட உறுப்பினர்கள் ஒன்றுகூடி, செயற்குழுவைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

செயற்குழு - செயலாளர், துணைச் செயலாளர், நிதி உறுப்பினர், விளம்பர உறுப்பினர் ஆகியோரைக்கொண்டதாக, மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்களோடு அமைந்ததாக இருக்க வேண்டும்.

செயலாளரை முதன்மையாகக் கொண்டே கிளைக் கழகம் இயங்கவேண்டும்.

முக்கிய பிரச்சினைகளைச் செயற்குழு கூடி முடிவு செய்ய வேண்டும்.

கிளைக் கழகத்தின் நடவடிக்கைகளை அவ்வப்போது, தலைமைக் கழக அலுவலகப் பொறுப்பாளருக்கு அறிவித்துக்கொண்டேயிருக்கவேண்டும்.

விளம்பரஞ் செய்யவேண்டிய செய்திகளை "மாலை மணி" இதழுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஜில்லாக் கழகங்கள், கிளைக் கழகங்கள் அமைந்த பிறகே அமைக்கப்படவேண்டியிருப்பதால், உறுப்பினர் சந்தாவில் 2 அணாவைக் கிளைக் கழகத்திற்கு வைத்துக்கொண்டு, மீதி 2 அணாவைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.

ஜில்லாக் கழகங்கள் அமைந்த பிறகு அவற்றிற்குச் சேரவேண்டிய தொகை பின்னால் அனுப்பிவைக்கப்படும்.

மேற்கண்ட முறையில், அங்காங்கு, "திராவிட முன்னேற்றக் கழகம்.............நகரக் கிளை" என்றும், "திராவிட முன்னேற்றக் கழகம் ....ற்றூர் (கிராமம்) கிளை" என்றும் பெயரிட்டுக் கொண்டு, கிளைக் கழகங்களை, விரைவில் (16—10—49-க்குள்) அமைக்கும்படி அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்,
திராவிட முன்னேற்றக் கழகம்.

"தினம் ஒரு புதுமை காணுவேன்"

—சி. வி. இராமன்

ஆனால் மக்களுக்குப் பயன்பட வேண்டும்!

மேனாடுகளில் விஞ்ஞானிகள் பற்பல புதுமைகளைக் கண்டுபிடித்தனர். இன்று நாம் பயன்படுத்தும் ரயில்வண்டி, மின்சாரம், ரேடியோ, விமானம், கப்பல், ஆடை செய்யும் மில்கள், மற்றும் பல இயந்திரங்கள் ஆகிய வசதிகள் பலவற்றை மேனாட்டாரே கண்டுபிடித்தனர். இப்போதும் பல விஞ்ஞானிகள் வைத்திய துறையில் மக்கள் நலன் பெறும் வழிகளைக் காணும் பணியில் ஈடுபடுகின்றனர். சிலர் அணுகுண்டு, உயிரழிக்கும் நாசக்கிருமிகள் முதலிய வற்றைக் காணுகின்றனர்.

அமெரிக்கா விஞ்ஞானி மின்சாரப் புதுமைகள் கண்டார்; இடி கட்டடத்தில் விழுந்தாலும் சேதம் செய்யாவாறு தரைக்கிறங்கும் வசதி கண்டார்; இன்னும் பலப்பல கண்டார்.

இங்கிலீஷ் விஞ்ஞானி இரயில், கப்பல் கண்டார்; ஆடை செய்யும் ஆலையைக் கண்டார். இன்னும் என்னென்னவோ மக்களுக்குத் தேவைப் படுவனவற்றைக் கண்டார்.

பிரெஞ்சு விஞ்ஞானி பறக்கும் விமானம் கண்டார்.

ரஷ்ய விஞ்ஞானி, மனிதன் நீண்டநாள் திறமையுடன் வாழ முறை கண்டார். நோயற்ற பிரசவத்திற்கு வழி கண்டார். இன்னும் பலப்பல கண்டார்.

ஆனால் நம் நாட்டிலும் விஞ்ஞானிகள் உளர். என்ன கண்டனர் இதுவரையில்? செடி மரங்களுக்கும் பகுத்தறிவு உண்டெனக் கண்டார். வானத்தின் நீலநிறத்திற்குக் காரணம் கண்டனர். ஒளி, ஒலி பற்றிய விந்தை விவரங்கள் கண்டனர். கைராத்தால் கின்னம் செய்து அடிப்பேற்றினாலும் சரியாகாநிருக்கும் வழிகண்டார். மற்றைய விஞ்ஞானிகளும் இது போல என்னென்னவோ கண்டனர். இவை விஞ்ஞானத்திற்குப் பெருமைதான், அதை யாரும் மறக்கவில்லை.

இவற்றால் பாமர மக்கள் அடையும் பலன் என்ன? அவர்களுடைய வாழ்வுப் பிரச்சினையைத் தீர்க்க வைக்கின்னத்தால் முடியுமா?

எனவே, இப்படிப்பட்ட மக்கள் வாழ்வை உயர்த்தப் பயன்படாத கண்டுபிடிப்புகள் அன்றாடம் ஒன்றல்ல பல கண்டு பிடிக்கப்பட்டாலும் அவை எவருக்கும் பலன் விளையாதவாறு இருப்பதில் நன்மை இல்லை.

சென்னை விமான நிலையத்தில் விஞ்ஞானி சர். சி. வி. இராமன் அன்றாடம் ஒரு புது விஷயத்தைக் கண்டுபிடிப்பதாகக் கூறினவர், சற்று சிந்தித்து இந்தக் "கண்டுபிடிப்புகள்" பாமர மக்களுக்குப் பயன்தரக் கூடியவாறும் இருக்க வேண்டுமென்பதையும் மனதில் பதித்து வைத்துக் ....

சிறந்த முறை

"ஒரு சுதந்திரமான சமூகத்தில் தான் கண்டுபிடிக்காத இடையூறுகள் என்ற உண்மையைச் சாதாரணமானவர்களும் உணரச் செய்வதுதான் கம்யூனிச பரவலைத் தடுப்பதற்கான சிறந்த முறையாகும்."

—ஹிந்து

துறவு பூண்ட மகரிஷி மங்கையை வீடுதுறக்கச் செய்தார்

மைசூரில் தசரா விழா நடந்து கொண்டிருந்தது. இந்த விசேஷ சந்தர்ப்பத்தில், துறவு பூண்ட மகரிஷி ஒருவர், ஒரு டாக்டர் வீட்டிற்குச் சென்று 3 நாள் தங்கியிருந்து அவ்வீட்டுடையவரின் 25 வயது மகளுக்குத் தத்துவ உபதேசம் செய்து, எவருக்கும் தெரியாமல் தம்முடன் அழைத்துக்கொண்டு போய் விட்டார். அம்மங்கையும் வீட்டை விட்டு மகரிஷி மேலெனக் கருதி, வீட்டையும் தன்னுடைய நான்கு வயது மகளையும் துறந்து விட்டு, மகரிஷியுடன் போய்விட்டாள். மகரிஷியின் மகிமையை உணராத போலீசார் அவர்களைக் கைது செய்யத் தேடுகின்றனர்.

விளம்பரம்

ஒரு பத்தி ஒரு அங்குலம்
ரூ. 5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரம் கேட்டால் அனுப்பப்படும்.

மானேஜர்

ஆதிக்கவெறி கொண்டலையும் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மைகள் இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மைதான். இரு லட்சியங்களில் ரூபின் லட்சியம் தான் சிறந்தது—மக்கள் சமுதாயத்துக்கு ஏற்றது—எதிர்காலத்தில் நிலைத்து நிற்கப் போவது-என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ரூபின் கோட்பாடு, என்றென்றும் வளர்ச்சி பெறக்கூடிய உயிர் சக்தி என்பதும், டாலர் சக்தி தேய்ந்து போகக்கூடிய அழிவு சக்தி என்பதும், மனவரலாறு எடுத்துக் காட்டும் மறுக்க முடியாத போதனை என்பதிலும் இரு அபிப்பிராயம் இருக்க நியாயமில்லை. இந்த இரு சக்திகளும் ஒன்றை ஒன்று விழுங்கி ஏப்பமிட, இரு அணிகளாகப் பிளவு பட்டு இருக்கின்றன.

அடிப்படை இலட்சியத்தில் முரண்பாடு இருந்த போதிலும், அதனை அடைய மேற்கொள்ளும் சாதனங்களில் சிறிதும் வேற்றுமை இல்லாத அளவில் இருந்து வருகிறது நிலைமை. எந்தப் பக்கத்திலிருந்து வெடிச்சத்தம் கிளம்புமோ, அந்த முதல் வெடியில் என்னென்னக் கேடுகள் அடைக்கப்பட்டுக் கிடக்கிறதோ! வெற்றி பக்களுக்கா-பணமூட்டைகளுக்கா-முடிவுகூற முடியாதச் சந்தேகமான சிக்கல் நிறைந்த பிரச்சினை. பல்லாயிரக் கணக்கானவர்களைக் கொன்றுக் குவிப்பதோடு போராட்டம் நின்றுவிடுமா? மேலும், பின்பு ஒருநாளைக்கு என்று தள்ளிப் போடப்படுமா? யாருக்கு ஆற்றல் இருக்கிறது இந்தக் கேள்விக்கு பதில் கூற!

பல்லாயிர வருஷங்களாகச் சிறுகச் சிறுக உருவாக்கப்பட்டு வந்த மனித நாகரிகமே நாசமாகிவிடுமோ- மனிதப் பூண்டே அழிந்துபோய்விடுமா- ஆருடம் யார் கூறவல்லார் இதற்கு?

லட்சியத்தில் முரண்பாடு கொண்ட இரு வல்லரசுகளின் மோதுதலுக்கு, ஊர் பிள்ளையை விட்டு அழுமே பார்க்கும் நிலையில், வேறு எந்த எந்தச் சிறுநாடுகள் நிபந்த நடவடிக்கைகளில் ஈடுபடப் போகின்றனவோ?

இந்த பயங்கரமான உலகப் போக்கில் இத்துணைக் கண்டம் எந்த அணியில் சேர கருதுக்கொண்டு இருக்கிறது? பிரதமர் பண்டிதர் கூறுவது போல நடுநிலைமை வகிக்க- அல்லது டாலருக்குத் —ரூபிளுக்கும் உலைக் கருத்து வேற்றுமையை களைந்து, போர் சேராமல் தடுத்து ஒழிக்க, இத்துணைக் கண்டத்தால் முடியுமா? அதற்கான ஆற்றல் இருக்கிறதா? பின்னர், விரிவாக ஆராய்வோம் இதுபற்றி. ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது, எவருடைய தயவுக்காக—உதவிக்காக—கடனுக்காக—அவர்கள் வாயில்படியைக் காத்து நிற்பவர்களால், கூறப்படும் ஆலோசனை—அறிவுரை—ஆகிய எதுவும் அவ்வளவு சக்தியுடையதாக இருக்காது என்பது உலக அனுபவம். கடன் கொடுத்தவர்களிடம், கண்டிப்பாக எதையும் பேசுவது முடியாத காரியம். சுயமாகக் - குறிப்பாகக் கூறினாலும், அந்த வார்த்தைகள், செல்லாதவன் வாயுரையாகவே மதிக்கப்படும்.

பண்டிதர் கூறுகிறார்,—போர் கூடாது. உலகம் முழுவதிலுமே போரைத் தடுக்க தனது முழு சக்தியையும் பயன் படுத்தப் போவதாக! இந்த வாசகத்திலிருந்து, அவருடைய மனித உள்ளம் நன்கு விளக்கமாகிறது. நாம் மகிழ்ச்சி அடைகிறோம், அவரின் மனித உள்ளம் கண்டு. அவரின் அபிலாஷையை வரவேற்கிறோம்—ஆதரிக்கிறோம்—ஆதரிக்க மற்றவர்களையும் முழு மனதுடன் வேண்டுகிறோம். போதுமா இவை மட்டும், போர் நிறுத்தப் பணிக்கு? பண்டிதர், இத்துணைக் கண்டத்தின் பிரதமராயிற்றே, முப்பது கோடி மக்களின் கண்ணாயிற்றே, காந்தியாரின் வழித் தோன்றல் ஆயிற்றே, என டாலர் கருதிக்கொண்டு இருந்தபோதிலும், அதற்காகப் பண்டிதரை கண்ணியமாகக் கௌரவித்த போதிலும், டாலரின் பிச்சைக்குக் காத்து கிடக்கும் நிலையில் இருக்கும் பண்டிதரை, அதே கண் கொண்டு டாலர் பார்க்குமா? பிரதமா பண்டிதர் வேறாகவும்—கடன் கேட்கும் பண்டிதர் வேறாகவும், முன்னவர் சிறந்தவராகவும், பின்னவர் சிறியவராகவும் அன்றோ, டாலர் கண்களுக்குத் தெரியும். அதற்கேற்றார்போலன்றோ டாலரின் மனத்திலும், இந்தியாபற்றிக்கொண்டுள்ள மதிப்பிலும் மாறுதல் இருக்கும். தங்கத்திற்கும் பித்தளைக்கும் வேற்றுமை இல்லாமல் இருக்கிறதா?

கம்யூனிசப் பரவலைத் தடுக்கவும், டாலருக்குத் துவாழ்வு தேடவும், அமெரிக்காவால் சீனாவில் எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சியால், சீனா போர்க்களமாகி, சீன மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று குவித்துக்கொள்ளும் குழப்பத்தைப் பெற்று, ஒருவாறு விடுதலை பெற்று—இனி சுகவாழ்வு பெறவேண்டிய நிலையை அடைந்துள்ளனர். டாலர் புகுந்த காலத்திற்கும், விடுதலை பெற்ற காலத்திற்கும் உள்ள இடைக்காலத்தில் சீன மக்கள் அடைந்த கேடுகளை, எண்ணுவதற்கே, நெஞ்சைப் பிளக்கிறது வேதனை. டாலர் நாட்டின் பொறுப்பான பதவியில் இருக்கும் டீன் ஆக்கிசன், பிரிட்டிஷ் மந்திரி பெவின்னுடன் மந்திராலோசனை செய்தாராம், கீழ்த்திசையில் கம்யூனிசத்தை எதிர்த்து நிற்கும் நிலையில் உள்ளது இந்தியாதான் என்று. உதவிகள் அனைத்தும் புரிவதென்று முடிவிறத்து வந்துவிட்டாராம்.

பெவின் சாதாரணமானவர் அல்ல. பிரிட்டிஷ் வெளி நாட்டு மந்திரி. ஆளும் திறமையில் அசகாய சூரர். ராஜதந்திரப் பயிற்சி அளவிற்கு அதிகமாக உள்ளவர். டாலர் சிலந்தியிலே சிக்கி, சீரழிகிறது அவரது சிந்தனை. இந்த நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல—பெவினுக்கும் இருதயம் இருக்கிறது. தமது நிலை கண்டு திடுக்கிட்டுத்தான் துடிப்பார் பெவின். அதனால் பயன் ஒன்றுமில்லையே. அவருடைய கலை இருதயம்- உயர்ந்த கோட்பாடு- அனைத்தும் அடியற்ற மரம்போல், டாலர் முன்னிலை சாய்ந்து விழுந்து விடுவதை. இந்நாட்டு மக்கள், கருத்திலே மாசற்றவர்களாக இருக்கல்; காணட்டும் — கண்ணீர் சிந்தட்டும் - பின்னாவது டாலரின் போக்கைப் புரிந்து கொள்ளட்டும்.

பெவின் பணிகிறார் — அவர் கோட்பாடு சிதைகிறது — டாலர் பிணைப்பில் சிக்கித் மீளவகை தெரியாமல் விழிக்கிறார்-பலநாள் சரியென்று தான் நம்பிவந்த இலட்சியங்கள் பலியாவதைக் கண்டு, அதனால் எழும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பிரிட்டிஷ் பந்திரி பெவின் தத்தளிக்கிறார்! டாலர் கூறும் அனைத்துக்கும் 'ஆம்! ஆம்!' என்று அலறுகிறார்! பெவின் தோற்றார்- பண்டிதர் வெற்றி பெறுவாரா? டாலர் பாம்புதான், பண்டிதரின் காலையும் கழுத்தையும் சுற்றிக் கொண்டு, நீண்டநாள் ஆகிவிட்டனவே!

இத்துணைக்கண்டம் சீனமாகிறது மக்கள் தங்களைத் தயாராக்கிக்கொள்ள வேண்டும், கொடுமைகளை தாங்கிக்கொள்ள. ஜவஹர் நினைத்தாலும், இந்த அறிவு நிலையிலிருந்து, இத்துணைக்கண்டத்தைக் காக்க முடியாது-முதகாலம் முடியாது! நிலைமை அந்த அளவில் நெருக்கடியான கட்டத்தை அடைந்து விட்டு இருக்கிறது!

பழங்குடிகளுக்குப் பழந்துணி பரிசா?

[சத்தியவாணி முத்து]

எங்கு வழங்கப்படுகிறது? பழங்குடிகளின் பரிதாப நிலைமையைப் பார் முழுதும் எடுத்துக் காட்டி பலன் பெற்ற சுயராஜ்ய சர்க்காரில். எப்போது வழங்குகிறார்கள்? பழங்குடியில் பிறந்த டாக்டர். அம்பேத்கார் சட்ட மந்திரியாகவும், J. சிவஷண்முகனார் சபாநாயகராகவும், B. V. ரமேஸ்வரன் மந்திரியாகவும் இருக்கும் இந்த நாளில்தான். என்றைக்கு வழங்கப் போகிறார்கள்? பழங்குடிகளுக்காக பங்கி காலனியில் வாழ்ந்து தொண்டு புரிந்த உத்தமர் காந்தியார் பிறந்த நன்னாளில்!

"காந்தி ஜயந்தி வாரத்தில் காங்கிரஸ் சேவாதளத் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று பழந்துணிகளைச் சேகரிப்பார்கள். இவைகளைச் சேரிகளிலிருக்கும் ஏழைகளுக்கும், தேவைப்பட்டவர்களுக்கும் அக்டோபர் 2ந் தேதியில் அளிக்கப்படும். தமிழ் நாடு காங்கிரஸ் காரியாலயத்திலும் சேகரிக்கப்படும்", மெயில் 24—9—49

மக்கள் ஏற்றத்தாழ்வின்றி சரிசமமாக வாழவேண்டும் என்று கண்ணும் கருத்துமாயிருந்து அரசோச்சும் இந்த காங்கிரஸ் சுயராஜ்ய சர்க்காரில் தாழ்ந்த சமூகத்தினரை உயர்த்த பழந்துணிகள் பரிசளிக்கப் படுகின்றன. மேல் சாதிக்காரர்கள் பல முறை உடுத்தி, கிழிந்து, சாயம் வெளுத்த கல்லடை துணிகள் ஜாதி வேறுபாட்டை வேரறுத்து, உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாட்டை வெட்டி வீழ்த்தி பழங்குடிகளுக்குக் கென்றே ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிவைத்த காருண்யமுள்ள வீரத்தியாகிகள் மஞ்சள் பெட்டி மகத்துவக்காரர்கள்—ஆளவந்தார்கள், தாராளமாகத் தருகிறார்கள்! இம்மாதிரி பழைய துணிகள் கொடுக்கும்மனப்பான்மையுடைய புத்திசாலிகள் நாடாளும் வரையில் நமக்கேது நல்வாழ்வு?

இந்தக் கண் துடைப்பு பழங்குடிகளை மாத்திரமல்ல, நாட்டிலுள்ளோர் அனைவரையும் ஏமாற்றுவதாகும். இந்தப் பழந்துணி பிச்சையெடுப்பை நினைக்குந்தோறும் என் பேனா உள்ளம் குமுறுகிறது தேட்பாரற்று கீழ்மக்களான கதை இதுபோன்றவைகளினால்தானே!

சமூக இளைஞர்களே! ரத்தம் கொதித்து நரம்பு துடிக்க வில்லையா?

—சத்தியவாணி முத்து
27—9—49

பிறப்பு

சென்னை, செப். 28—

சென்னைத் தோழர் எஸ். வி. கணேசன் (ஓவியர்) அவர்களின் துணைவியார் தோழியர் சண்பகவல்லி அம்மைக்கு24—9—49 சனியன்று ஓர் பெண் மகவு பிறந்தது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம் மகிழ்ச்சி! [ஆ—ா]

அக்டோபர் 2 உலக அமைதி நாள்

2—10—49 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் அகில உலக அமைதி மாநாடுநடைபெறும்.

அதுபோது மாகாண தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் தோழர் வி. சக்கரை அவர்கள் தலைமை வகிப்பார்.

சொற்பொழிவாளர்கள் :—

தோழர்கள் வி. ஜி. ராவ், இரா. நெடுஞ்செழியன், சி.வி. இராஜகோபாலர், இளங்கோவன், காஞ்சி கல்யாணசுந்தரம், குயிலன்.

உலக அமைதி நாடுவோர்,
சென்னை.

இனி நடப்பவை

வடசென்னை:— வடசென்னை 4-வது வட்ட திராவிடர் கழக உறுப்பினர்களின் கூட்டமொன்று, 2-10-49 ஞாயிறு காலை 9-மணிக்கு வண்ணை இராமாநுச அய்யர்தெரு, 35- எண்ணுள்ள கழகக் கட்டிடத்தில் நடைபெறும். கழக எதிர்கால அமைப்பு முறைப்பற்றி ஆவன செய்ய வேண்டியிருப்பதாலும், நிர்வாக உறுப்பினர் தேர்தல் இருப்பதாலும் உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு, வருமபடி கழகத் தலைவர் தோழர் கே. எம். கண்ணபிரான் வேண்டுகிறார்.

* * *

சென்னை:— சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக 9-10-49 ஞாயிறு மாலை 5-மணிக்கு தோழர் ஆர் கே. சண்முகம் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டுஎல்லை மாநாடு நடைபெறும். சென்னை மாமந்து அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைப்பார் எனத் தோழர் இ.மு. சுப்பிரமணியம் (செயலாளர்) அறிவிக்கிறார்.

* * *

இராமநாதபுரம்:— திராவிட முன்னேற்றக் கழகம் அமைப்பது பற்றி பேசவேண்டி, 2-10-49 ஞாயிறு காலை9-மணிக்கு இவ்வூர் சரசுவதி விலாச அச்சகத்தில் ஓர் கூட்டம் நடைபெறும். இதையே அழைப்பாகக் கொண்டு உள்ளூர், வெளியூர்த் தோழர்களும் வருமாறு தோழர் இரா. கா. வீரமணி (தி. க. செயலாளர். முதுகுளத்தூர்) வேண்டுகிறார்.

* * *

திருச்சி:—1-10-49 சனி மாலை 6. மணிக்கு திருச்சி இரயில்வே காலனி பெல்ஸ் கிரவுண்ட் 5 எண்ணுள்ள இல்லத்தில் காலனி திராவிட முன்னேற்றக் கழகக் கிளை அமைப்பதுபற்றி கூடிப்பேச இருப்பதால் தி. மு. கழக அனுதாபிகளும், அன்பர்களும் இதையே அழைப்பாகக் கொண்டு, வருமாறு தோழர். ஜி. அய்யாதுரை அழைக்கிறார்.

* * *

புதுக்கோட்டை:— 2-10-49 ஞாயிறு இரவு 8 மணிக்கு புதுக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகஅமைப்புக்கூட்டம் 'பொன்னி' அலுவலகமாடியில் நடைபெறும். தி. மு. கழக வளர்ச்சியில் கருத்துடைய புதுக்கோட்டைத்தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தோழர்கு. அய்யாமணி கேட்டுக்கொள்கிறார்.

* * *

உறையூர்:—உறந்தை திராவிடர் கழகம் என்பதை திராவிட முன்னேற்றக்கழகமெனமாற்றுவது பற்றியும், அதில் புது உறுப்பினர்களை சேர்ப்பது பற்றியும், செயற்குழு தேர்தலுக்காகவும் 2-10-49ஞாயிறு காலை 9-30. மணிக்கு உறையூர் பி. டி. இராஜன் பார்க்கில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்கு இவ்வூர் சுற்று வட்டாரத்தில் உள்ள திராவிடத்தோழர்கள் இதையே அழைப்பாகக்கொண்டு, வருமாறுத் தோழர் எம். எஸ். மணி (பொதுக் குழு உறுப்பினர்) அழைக்கிறார்.

* *

சென்னை கோடம்பாக்கம்—கோடம்பாக்கம் "திராவிட முன்னேற்றக் கழகம்" அமைப்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்ய வேண்டி, 2-10-49 மாலை 6மணிக்கு தோழர். இரா. பொருள்மன்னன் அவர்கள் (49, ஆற்காடு ரோடு) இல்லத்தில் ஓர் அமைப்புக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கோடம்பாக்கம், சூளைமேடு மற்றும் சுற்று வட்டாரத் திராவிடத் தோழர்கள் அனைவரும் தவறாது வருமாறுத் தோழர் மறைமலை அழைக்கிறார்.

* * *

சென்னை எழும்பூர்—2-10-49 காலை 8 மணிக்கு 157 அம்மன் கோயில் தெரு, எழும்பூர் மார்க்கெட் அருகில் 'திராவிடன்' ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்களால் திராவிட முன்னேற்றக் கழகக் கொடி ஏற்று விழா நடைபெறும்.

* * *

ஆற்காடு— ஆற்காடு திராவிட முன்னேற்றக் கழகம் தற்காலிக அமைப்பு ஏற்படுத்த வேண்டியிருப்பதால் 2-10-49 மாலை 4-30 மணிக்கு,ஆற்காடு 'சாந்தி பவன்' மேல் மாடியில் தி. மு. கழகப்பற்றுள்ளோர் அனைவரும் வந்து கூடும்படியும், தங்கள் பெயரை அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ளும் படியும் தோழர் நு. பொன்னம்பலம் (அமைப்பாளர்) வேண்டுகிறார்.

* * *

திருச்சி—2-10-49 ஞாயிறு மாலை 5மணிக்குத் திருச்சி "கருணாநிதி பார்க்"கில் திருச்சி நகர திராவிடமுன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். கழக வளர்ச்சியில் கருத்துடையோர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தோழர் ஜி. பராங்குசம் (அமைப்பாளர்) அழைக்கிறார்.

* * *

திருவானைக்காவல்:— 2-10-49 காலை 10 மணிக்கு திருவானைக்காவல் தோழர் வடிவேலு அவர்கள் இல்லத்தில் சீரங்கம், திருவானைக்கா நகர திராவிட முன்னேற்ற கழக அமைப்புக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். டி கழகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புவோரும். தி. மு. கழக உறுப்பினரும, வருமாறுத் தோழர் வி. சீனிவாசன் அழைக்கிறார்.

* * *

ஈரோடு:—2—10—49 ஞாயிறு காலை 10 மணிக்கு மண்டபம் வீதியில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் தி. மு. கழக அமைப்புக்குழுக் கூட்டமும், கழக நிர்வாகிகள் தேர்வும், கொடியேற்று விழாவும் நடைபெறும். கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி தோழர் என் அப்பாவு வேண்டுகிறார்.

* * *

திருவள்ளூர்:—திருவள்ளூர் வட்டத்திராவிடர் கழகம் என்பதை "திராவிட முன்னேற்றக்கழகம்" எனமாற்றுவது பற்றியும், புது உறுப்பினர்கள் சேர்ப்பது பற்றியும், நிர்வாகிகள் தேர்தலுக்காகவும் கலந்துபேச 1-10-49 சனி இரவு 8 30 மணிக்கு ஓர் கூட்டம் நடைபெறும். கழகத்தோழர்களை வரும்படி தோழர் எம.ஏ. முத்து அழைக்கிறார்.

* * *

ஆம்பூர்:— 2-10-49 ஞாயிறு காலை 10மணிக்குக் காசிநாதர் மணையில் (எண் 14, நாகர சத்திரியான் தெரு) திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் சுந்தரராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும். கழகத் தோழர்கள் அனைவரும கலந்துகொள்ளவும எனத் தோழர்களையும் அதில் கலந்து கொள்ளும்படி, தோழர் ஐ. பெ. கோவிந்தன் அழைக்கிறார்.

டாலர் மதிப்பைக் குறைத்த முக்கூட்டு மாநாட்டினர்

ஸ்டெர்லிங் பகுதியில் அமெரிக்க டாலரின் மதிப்பைக குறைக்கத் திட்டமிட்ட, பிரிட்டிஷ்—கனடா—அமெரிக்க ஆகிய முக்கூட்டு நாடுகளைச்சேர்ந்தபிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அவர்களில் சிலர். இடமிருந்து வலம்:—டீன் அக்கேஸன் (அமெரிக்கா), ஜான் ஸ்னிடர் (அமெரிக்கா) சர். ஸ்டாபோர்டு. கிரிப்ஸ், எர்னஸ்ட் பெவின் (பிரிட்டிஷ்)

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

வடகோவை—கிளை

கோயமுத்தூர்; செப். 26—

25—9—49 ஞாயிறு மாலை 6 மணிக்குத் தோழர் எம். சாமியப்பன் தலைமையில் அவரது இல்லத்தில், வடகோவை திராவிட கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது வடகோவை திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு, வடகோவைத் திராவிட முன்னேற்ற கழகம் நிறுவப்பட்டது. செயற்குழு ஒன்று நிறுவப்பட்டது.

செயலாளர்:—எம் கனகரத்தினம். பொருள் உறுப்பினர்;-சி. வி. கோபால். விளம்பர உறுப்பினர்—ம. கி. ராசகோபால் ஏனைய செயற்குழு உறுப்பினர்;— என்.பி. சாமி, எம். சாமியப்பன், கி. கே. பெருமாள், கி. சீனிவாசன், எஸ். தேவராசன், பி. காளியப்பன், பா. பாலராசு, சத்தியராசு, எஸ். நாகராசன் என விளம்பர உறுப்பினர் தோழர் ம. கி. இராசகோபால் எழுதுகிறார்.

* * *

காஞ்சி பிள்ளையார்பாளையம்-கிளை

காஞ்சிபுரம், செப். 26—

25-9-49 ஞாயிறு மாலை 7-30 மணிக்குத் தோழிர் ப. ராசமாணிக்கம் அவர்கள் தலைமையில், கழக அங்கத்தினர்கள் கூடி இக்காள் வரை "திராவிடர் கழகம்" என்ற பெயருடைய கழகத்தை "திராவிட முன்னேற்றக் கழகம்" என மாற்றியமைக்கத் தீர்மானித்தனர். தோழர் எஸ். கிருஷ்ணசாமி அவர்களை செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

சோழநகர்—கிளை

சோழநகர், செப், 25—

24-9-49 மாலை 5 மணிக்கு, இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்கள் அனைவரும் தோழர் பி. எஸ். இளங்கோ தலைமையில் கூடி திராவிட முன்னேற்றக்கழகம் என்று கழகத்தின் பெயரை மாற்றிக் கொண்டனர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது

செயலாளர்:—சேரன். பொருள் உறுப்பினர்:—மா.கண்ணன். விளம்பர உறுப்பினர்:—தமிழரசன். மற்றும் சில செயற்குழு உறுப்பினர்கள். தோழர் என். எஸ். இளங்கோ கூட்டத்தின் நோக்கத்தை விரிவுரையின் மூலம் விளக்கினார்.

* * *

பெரியார் நகர் (பெங்களூர்)-கிளை

பெரியார் இராமசாமி நகர் (பெங்களூர்) செப். 27—

இந்நகர் திராவிடர் கழகச்செயற்குழு கூட்டம் 24-9-49ல் நடைபெற்றது. "பெரியார் ராமசாமிநகர் திராவிடர் கழகம்" என்பதை. "திராவிட முன்னேற்றக் கழகம்" எனமாற்றி அமைக்கப்பட்டு, பழைய நிர்வாகிகளிடம் தற்காலிகமாக பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. எனச் செயலாளர் தோழர் பெ. ம. அப்பாத்துரை எழுதுகிறார்

* * *

முல்லைக்கொம்மை-கிளை

முல்லைக்கொம்மை, செப். 26—

முல்லைக்கொம்மை திராவிடர் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 25-9-49 ஞாயிறு அன்று தலைவர் தோழர் எம். பி. சத்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகத்தை, "திராவிடர்முன்னேற்றக் கழகம்" என்று மாற்றி அமைப்பதாக ஏகமனதுடன் தீர்மானிக்கப்பட்டது. செயலாளராகத் தோழர் எம். பி. சத்தியும் மற்றும் நிர்வாக உறுப்பினர்களாக 10 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். எனத்தோழர் எம். பி. சத்தி அவர்கள் எழுதுகிறார்.

* * *

சங்கரன் கோவில்—கிளை

சங்கரன் கோவில், செப். 26—

25—9—49 ஞாயிறு மாலை 4-மணிக்கு நாடார் பொதுக் கட்டிடத்தில் தோழர் மலையான் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் சே. தளவாய், எஸ். ஆவுடையப்பன் ஆகிய இருவரும் சொற்பொழிவாற்றினார்கள். பின்பு செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ம. அருள்சாமி துணைச்செயலாளர்;—க. நாகசாமி. பொருள் உறுப்பினர்;—எஸ். இராசேந்திரன். விளம்பர உறுப்பினர்;-ஆவுடையப்பன் ஏனைய செயற்குழு உறுப்பினர். ஆர். எஸ். ஆறுமுகம், சி. பால் வண்ணம், எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

திருவத்திபுரம்-கிளை

திருவத்திபுரம், செப். 26—

நேற்று 25-9-49 மாலை 5மணிக்கு திருவத்திபுரம் திராவிடர் கழக அங்கத்தினர் பொதுக்கூட்டம் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திராவிடர் கழகம இருப்பதா, கலைத்து விடுவதா என்பது குறித்துத் தோழர்கள் பலர் விவாதித்தனர். பின்னர் திராவிடர் கழகம் கலைக்கப்பட்டது.

அதே இடத்தில் தோழர் சி. வே. சுப்பராயன் அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. தோழர் சி. வே. சுப்பராயன் அவர்களைச் செயலாளராகக் கொண்ட செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் மா.ரா. இராசமாணிக்கம் எழுதுகிறார்.

* * *

விருதுநகர்-கிளை

விருதுநகர், செப். 27—

25-9-49 மாலை விருதுநகர் என். பி. எஸ். ஹாலில் தோழர் எஸ். உத்தண்டன் அவர்கள் தலைமையில் திராவிடர் கழக அங்கத்தினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க திராவிடர் கழகத்தைக் கலைத்து விடுவது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பின்பு திராவிடர் முன்னேற்றக் கழக அமைப்புக்கூட்டம் தோழர் எஸ். உத்தண்டன் தலைமையில் அதே இடத்தில் நடைபெற்றது.

தற்காலிக அமைப்பாளர்களாகத் தோழர்கள் க. இராமசாமியும், மு. இளஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

16-10-49ல் துவக்க விழா கொண்டாடுவதென்று மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தைத் தோழர்கள் எஸ். உத்தண்டன், கே. எஸ். எஸ். அய்யாச்சாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் முன்னின்று நடத்தினர். எனத் தோழர் க. இராமசாமி எழுதுகிறார்.

* * *

வேலூர் (வ-ஆ)-கிளை

வேலூர் (வ-ஆ). செப்-26—

நேற்று 25-9-39 மாலை 3மணிக்கு தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் தலைமையில் வேலூர் நகர திராவிட முன்னேற்றக் கழகக்கிளை தோற்றுவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு கழக அன்பர்கள் ஏராளமாக வந்திருந்தனர். பின்பு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:— ஆர். இராதா கிருட்டினன். துணைச்செயலாளர்:— கோ. கிருட்டினன். பொருள் உறுப்பினர்:— எம். டி. பார்த்தசாரதி. தோழர் சி. பி. சிற்றரசு அமைப்பாளராக இருந்து செயலாற்ற இசைந்தார்.

ஏனைய செயற்குழு உறுப்பினர்: எம். கே. பார்த்தசாரதி, வி.கே. செகநாதன், வி.டி. இராசகோபால், பொ. குப்புசாமி. கே. குருநாதயன் எஸ். சுப்பிரமணியம், வி. விநாயகம் ஏ. ஆர். பார்த்தசாரதி டி. பிச்சையாண்டி, என். சுருணசங்கரன், இரத்தினவேலு, எஸ். குப்புசாமி, வி. டி. குப்புசாமி, வி. எஸ். இரங்கநாதன். கி. இராமன், வி. டி. அண்ணாமலை, வி. குமாரசாமி, இராதகிருட்டினன், கோ. தட்சணாமூர்த்தி, வி. பி. ஏகாம்பரம் பத்மநாபன், வேணு.

பின்பு எதிர்கால நடவடிக்கைகள் பற்றி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழகவளர்ச்சிக்காக வந்திருந்த தோழர்களிடம் நன்கொடையாக ரூ. 108 வசூலிக்கப்பட்டது. நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது. எனத் தோழர் கோ. கிருட்டினன் எழுதுகிறார்.

* * *

சாத்தூர்—கிளை

சாத்தூர், செப். 26

திராவிடர் முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம் இன்று நடைபெற்றது திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினர்களாகச்சேர இசைந்து 116 தோழர்கள் கையொப்பமிட்டனர். பின்பு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—பி. நடராசன் பொருள் உறுப்பினர் எம். நடராஜன் விளம்பர உறுப்பினர்:—வி. டி. நடராஜன்

ஏனைய செயற்குழு உறுப்பினர்:- பொன்னையா, இராசு, தங்கராஜன், எஸ். விசுவாசம் என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

சென்னிமலை—கிளை

சென்னிமலை, செப், 26

சென்னிமலை திராவிடர் கழகத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 25-9-49ல் உபதலைவர் தோழர் எஸ். எஸ். மணி தலைமையில் நடைபெற்றது. திராவிடர் கழகத்தைக் கலைத்து விடுவது எனத்தீர்மானிக்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகம் சென்னிமலை கிளை என்று புதிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. தோழர் எஸ். எஸ். மணி அவர்களைச் செயலாளராகக்கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டது. எனத்தோழர் ஆ. குழந்தைசாமி எழுதுகிறார்.

* * *

மங்கநல்லூர்—கிளை

மங்கநல்லூர், செப் 26—

25—9—49 ஞாயிறு அன்று தோழர் வை. மாணிக்கம் அவர்கள் தலைமையில் திராவிடர் கழகக் கமிட்டிக்கூட்டம் நடைபெற்றது.

'மங்கநல்லூர் திராவிடர் கழகம்' என்றிருந்ததை மாற்றி 'திராவிட முன்னேற்றக்கழகம்—மங்கநல்லூர் கிளை' என்று அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-இரா. முத்துக்குமாரசாமி. நிதி உறுப்பினர்- சௌ. பாண்டுரங்கன். விளம்பர உறுப்பினர்- ந. முத்தையன் ஏனைய செயற்குழு உறுப்பினர்- மா. சொக்கலிங்கம், கு. பாலசுந்தரம், சை. மு. சுல்தான், பி, எஸ். இளங்கோ, ப. சுந்தரமூர்த்தி, சு. நாகராசன், வை. மாணிக்கம், கா. நடராசன். எனத் தோழர் ந. முத்தையன் எழுதுகிறார்.

திராவிட முன்னேற்ற மறுமலர்ச்சிக் கழகம் தோற்றம்

சி. காஞ்சிபுரம், செப். 25—

இன்று மாலை இவ்வூர் திராவிட மறுமலர்ச்சிக் கழகத்தின் நிர்வாக உறுப்பினர்கள் கூட்டமொன்று நடைபெற்றது அன்று ஆலோசிக்க எடுத்துக்கொண்ட தீர்மானங்களில் முதல் தீர்மானத்தைத் தலைவர் தோழர் டி. சகுல்ராசு எதிர்த்ததோடு, தான் தலைமை வகிக்கவும் முடியாதெனக் கூறி. தன் பதவியையும் எழுத்துமூலம் இராஜினாமா கொடுத்துவிட்டார். பின்பு துணைத் தலைவர் தோழர் எம். பி. டி. மூர்த்தி தலைமையில் நடந்தது.

தீர்மானங்கள் :

திராவிட மறுமலர்ச்சிக் கழகம் என்றிருப்பதை "திராவிட முன்னேற்ற மறுமலர்ச்சிக் கழகம்" என்ற பெயரால் துவக்கிப் பணியாற்றுவது.

(2) 16—10—49-ல் காஞ்சியில் நடக்க இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாவைக் கழகத்தின் சார்பிலே நடத்துவது.

இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கீழ்க்கண்டவர்கள் நிர்வாக உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் :—தோழர் எம். பி. டி. மூர்த்தி, துணைத் தலைவர்:-தோழர் எ. கணேசன். செயலாளர் :—தோழர் ஜி. எஸ். மணி, துணைச் செயலாளர் :—தோழர் கே. கண்ணன். பொருளாளர் :—தோழர் டி. சபாபதி. நிர்வாகக் குழுவினர்: தோழர்கள் என். வேலப்பன், வி. கண்ணப்பன், எஸ். எல்லப்பன், எ. ஆர். வெங்கட்ராமன், எம். துரைசாமி, சி. பி. ஜி. சாமி, டி. கே. மூர்த்தி, ஜி. வரதன், கே. கோவிந்தராசு, எஸ். அருணாசலம் ஆகியோர் ஆவர். எனத் தோழர் ஜி. எஸ். மணி எழுதுகிறார்.

பூமியின் சாரம்!

"இவ்வளவு காலமும் அது (கம்யூனிஸ்ட் கட்சி) தழைத்து வந்திருப்பதற்கான மூலகாரணத்தையும் களைவதில ஏற்பாடாக முனையவேண்டும். பொருளாதார இன்னல் வரவரமிருந்து பொதுவாக மக்கள் உள்ளம் ஒடிந்துவரும் நிலையே கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஊக்கமளித்து வந்திருக்கிறது."

—சு. மி.

விருதுநகர் திராவிடத் தோழர்களுக்கு அறிவிப்பு.

விருதுநகர், செப். 26—

திராவிட முன்னேற்றக் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேர விரும்பும் தோழர்கள். தோழர்கள் க. இராமசாமியிடத்திலோ மு. இளஞ்செழியனிடத்திலோ தங்களை பதிவுசெய்து கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள். எனத் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கே. எஸ். எஸ். அய்யாச்சாமி, எஸ். உத்தண்டன் ஆகியோர் கேட்டுக்கொள்கிறார்கள்.

இந்நகர் காங்கிரஸ் பேச்சாளரும் ஊழியருமான தோழர் கே. சோலையப்பன் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு, தன்னையும் டி. கழகத்தின் அங்கத்தினராகப் பதிவு செய்துகொண்டார். எனத் தோழர் க. இராமசாமி அறிவிக்கிறார்.

புரட்சிக் கவி பாரதிதாசன் படிப்பகம்.

வடக்கூர் (தூத்துக்குடி) செப். 25.

இப் படிப்பகத்தின் அங்கத்தினர்கள் கூட்டமொன்று இன்று நடைபெற்றது. அதில் கீழ்க்கண்ட நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர்:—தோழர் தா. சுப்பையா. துணைத் தலைவர்:—தோழர் சி. மோசஸ். பொருளாளர்:—தோழர் மா. துரையப்பன். செயலாளர்:—தோழர் மு. பாண்டியன். துணைச் செயலாளர்:— தோழர் ப. கன்னியப்பன் மற்றும் ஒன்பது நிர்வாக உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அன்று நிறைவேறிய தீர்மானம்.

"சென்னையில் 17—9—49 ல் திராவிடர் கழக மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் கூடி முடிவு செய்த தீர்மானத்தை டி. படிப்பக அங்கத்தினர்கள் ஏக மனதாக ஒப்புக்கொள்கிறார்கள்" என்பதாகும். எனத் தோழர் மு. பால் பாண்டி அறிவிக்கிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.